பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 17 செவ்வாய்க்கிழமை 04.10.2022 கதிர் 331

இது ரகசியம் அல்ல!

புனர்வாழ்வளித்தல் அலுவலகம் தொடர்பான சட்ட மூலத்தின் மீது நாடாளுமன்றத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா ஓர் உண்மை விடயத்தை அப்பட்டமாக - வெளிப்படையாக - போட்டுடைத்துப் பேசியிருக்கின்றார்.

☞2

# ஜெனிவாவில் இலங்கைக்கான ஆதரவு மேலும் குறைகிறது!

## கடும் இராஜதந்திர நெருக்கடியில் கொழும்பு



கொழும்பு, ஒக்ரோபர் 04

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை குறித்த பிரேரணை வாக்கெடுப்பிற்கு விடப்பட்டால் தனக்கு போதிய ஆதரவு கிடைக்காது என இலங்கை கருதுகின்றது. வாக்களிக்கத் தகுதியுள்ள 47 நாடுகளில் ஆக ஆறு நாடுகள் மாத்திரமே தனக்கு ஆதரவாக - பிரேரணைக்கு எதிராக - வாக்களிக்கும் என கொழும்பு அச்சம் கொண்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

☞10

## பிரி. ஆளும் கட்சி மாநாட்டில் ரெலோ சுரேந்திரன் பங்கேற்பு



பிரித்தானியாவின் ஆளும் கட்சியான கொன்சர்வேட்டிவ் கட்சியின் மாநாடு கடந்த 2 ஆம் திகதி முதல் நாளை 5 ஆம் திகதி வரை பிரிட்டனின் பேர்மிங்ஹாம் நகரில் நடைபெறுகிறது.

இதில் இலங்கையில் இருந்து ரெலோவின் ஊடகப் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் கலந்து கொள்கிறார்.

இலங்கைத் தமிழ் மக்கள் பிரதிநிதியாக அவர் அழைக்கப்பட்டுள்ளார். பிரித்தானிய தமிழ் கொன்சர்வேட்டிவ் அமைப்பினர் இந்த ஏற்பாட்டை முன்னெடுத்துள்ளனர்.

☞2

## கிழக்குப் பால் உற்பத்தித் தொழிற்துறையை முழுமையாக நாசப்படுத்தியுள்ளாராம் ஆளுநர்

### நாடாளுமன்றத்தில் சாணக்கியன் குற்றச்சாட்டு

கிழக்கு மாகாணத்தில் பால் உற்பத்தி தொழிற்துறையை முழுமையாக கிழக்கு மாகாண ஆளுநர் நாசப்படுத்தியுள்ளார் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்துள்ளார், ஆகவே இவ்விடயம் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு விவசாயத்துறை அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார். நாடாளுமன்றத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி

☞10



## பெண்ணும் சகாவும் ஹெரோயினுடன் யாழில் கைது

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை கிளன்தோட்டப்பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

6 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை, உடமையில் விற்பனைக்காக வைத்திருந்த குற்றச்சாட்டில் 30 வயதுடைய பெண் கைது செய்யப்பட்டிருந்தார்.

☞2

## எரிவாயுவின் விலை மீண்டும் குறையும்


லிட்ரோ உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலை மீண்டும் குறைக்கப்படும் என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதன்படி, இம்மாதம் 5ஆம் திகதி நள்ளிரவு முதல் எரிவாயு சிலிண்டரின் விலை

☞2

## ஆசிரியையான ஒரு பிள்ளையின் தாயார்தான் சாய்ந்தமருதுக் கடற்கரையில் சடலமாக மீட்பு





### தற்கொலையா? கொலையா? பொலிஸார் தீவிர விசாரணை

அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது கடற்கரை பிரதேசத்தில் மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை கடலில் மிதந்து வந்த சடலத்தைக் கடற்படையினரின் உதவியுடன் சாய்ந்தமருதுப் பொலிஸார் மீட்டிருந்தனர்.

இந்தச் சடலம் அடையாளம்

☞2

## மட்டு. கொக்கட்டிச்சோலையில் காட்டு யானைக்கு ஒருவர் பலி!

(கனகராசா சரவணன்);

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள தாந்தாமலை பகுதியில் குளத்தில் மீன்பிடிக்க சென்ற விவசாயி ஒருவர் யானை தாக்கியதில் உயிரிழந்த

☞2

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் பொருளாதாரக் குற்றங்கள் குறித்து விசாரணை

இலங்கையில் இடம்பெற்ற பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பான விடயங்களை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் விளக்கியிருந்த நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களை கண்டறிவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

☞2

## விவசாயிகளுக்கு நீதி கோரி போராட்டத்தில் குதித்த மைத்திரி





முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பொலன்னறுவை நகரில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு அரசை வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திர விவசாயிகள் முன்னணி மற்றும் பொலனறுவை மாவட்ட விவசாயிகள் அமைப்புகள் இணைந்து இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, நெல்லுக்கு உரிய விலை மற்றும் அடுத்த பருவத்துக்கு உரம் வழங்குமாறு அவர்கள் அரசிடம் கோரிக்கை விடுத்தனர்.

## இனி இது .....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இந்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும்போது, முதலில் இந்த நாடாளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் போதைப்பொருள் பாவனை தொடர்பான சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்" - என்று அவர் வலியுறுத்தினார்.

"போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் இங்கும் (நாடாளுமன்றத்துக்குள்ளும்) இருக்கின்றார்கள். இந்தப் போதைப் பாவனை பற்றிய சோதனை நடவடிக்கைகளுக்கு ஒவ்வொரு உறுப்பினரையும் உட்படுத்தினால் மருந்துகள் மற்றும் போதைப் பொருள்களுக்கு அடிமையான எம்.பிக்களின் உண்மையான எண்ணிக்கை அம்பலமாகும்" - என்று அவர் கூறியிருக்கிறார்.

அது உண்மைதான். மறுக்க முடியாததுதான்.

சிறைக்கு விஜயம் செய்வதற்கான நேரம் கடந்து, அகால நேரத்தில், சகாக்கள் சிலருடன் பலவந்தமாக சிறை ஒன்றுக்குள் போதையுடன் புகுந்து, தமிழ் அரசியல் கைதிகளை முட்டுக்காலில் வரிசையில் நிற்க விட்டு, பிஸ்டலைத் தலையில் வைத்து அழுத்தி, அவர்களைக் கொல்லப் போகிறார் என அச்சுறுத்தி, கேவலமாக நடந்த சிறைத்துறை அமைச்சரை சகித்துக் கொண்ட நாடு இது. அவர் மீது எந்தச் சட்ட நடவடிக்கையும் எடுக்காத அரசு இது. தொடர்ந்தும் அவருக்கு பதவிகளை வழங்கி, அவரது போதைப் பொருள் பாவனைக்கு அங்கீகாரம் அளித்த அரசுக் கட்டமைப்பு அதிகாரத்தில் இருக்கின்ற நாடு இது!

அத்தகைய போதைப் பொருள் பாவனையாளர்களை நாட்டின் சட்டத்தை யாக்கும் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தில் கொண்ட இந்த தேசத்தில் வேறு என்ன நடக்கும்?

'பேய் அரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரங்கள்' என்பது இதனைத்தான்...!

***

புதிய கல்வி அமைச்சர் வந்து விட்டார். அதனால் புதிய கல்விச் சீர்திருத்தம் குறித்து மீண்டும் இப்போது பேசப்படுகின்றது.

ஒவ்வொரு கல்வி அமைச்சரும் வந்ததும் ஆளாளுக்கு ஏற்றவாறு, சீர்திருத்தம் என்று மாற்றங்களைச் செய்து, 'உள்ளதையும் கெடுத்தான் நொள்ளைக் கண்ணன்' என்பது போல குழப்பி விட்டுப் போவதுதான் பல சமயங்களில் நடக்கும் விவகாரம்.

சீர்திருத்தம் செய்ய முன்னர் அதற்கான வெள்ளை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். அது பல மட்டங்களிலும் விவாதிக்கப்பட்டு பேசு பொருளாகி, இறுதி செய்யப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் - விசேடமாகத் தூர நோக்கு இலக்கோடு.

1980 இல் 31 வயது இளைஞனாக இருந்த போது கல்வி அமைச்சரான ரணில் விக்கிரமசிங்க அப்போது இத்தகைய வெள்ளை அறிக்கையைச் சமர்ப்பித்து, அதன் அடிப்படையில் பின்னர் கொண்டு வந்த கல்விச் சீர்திருத்தம்தான் இலங்கை வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாக இன்றும் பேசப்படுகிறது.

கல்விச் சீர்திருத்தம் என்பது கல்வி அமைச்சில் இருக்கும் நான்கு, ஐந்து பிரகிருதிகள் அல்லது அவர்களது ஆலோசகர்கள் அல்லது புத்திஜீவிகள் சிலரின் கொள்கைப் பத்திரமாக - அவர்களின் எண்ண ஓட்டத்தை நடைமுறைப்படுத்தும் விடயமாக - அமைந்து விடக்கூடாது.

கல்வித்துறையுடன் தொடர்புடைய சகல மட்டத்தினரதும் ஆளுமைகளையும், ஆலோசனைகளையும், அனுபவங்களையும் உள்வாங்கி, யதார்த்த நிலைமையோடு ஒன்றித்து, பயனுள்ள வகையில் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட வேண்டும். வெறுமனே சில அதிகாரிகள் 'எடுத்தோம், கவிழ்த்தோம்' என்ற மாதிரி விடயத்தை கையாண்டு விடக்கூடாது.

பொறுப்புள்ளோர் கவனத்திற்கு இந்த ஆலோசனை சமர்ப்பணம்.

- மின்னல் -

## இலங்கை மனித .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அமர்வில் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட தமது அறிக்கையில், பொருளாதார நெருக்கடிக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டுமாயின் இந்த நாட்டில் வேரூன்றியிருக்கும் ஊழல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

மேலும், இலங்கையில் கடந்த கால மற்றும் அண்மைக்கால மனித உரிமை மீறல்கள் மற்றும் பொருளாதார குற்றங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், பல்வேறு அரசியல் காரணங்களால் அவ்வப்போது தேசிய கொள்கைகளில் மாற்றம் கொண்டுவருவதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் அவதானம் செலுத்தவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி, நிதி அமைச்சு, நாட்டின் பொருளாதாரத்துடன் நேரடியாக தொடர்புடைய தேசிய கொள்கைகளை அமுல்படுத்துவது தொடர்பான அமைச்சுகள் மற்றும் தற்போது செயற்படும் அமைச்சுகளிடமிருந்து அறிக்கைகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்விடயத்திற்குப் பல பொருளாதார நிபுணர்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ள ஆணைக்குழு, பொருளாதார வீழ்ச்சியின் ஊடாக மக்களின் வாழ்வுரிமை மீறப்பட்டதன் அடிப்படையில் இந்த விசாரணை நடத்தப்படவுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.

## ஆசிரியையான ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படாதிருந்த நிலையில் பொது மக்களின் உதவியைப் பொலிஸார் கோரியிருந்தனர். அத்துடன் ஊடகங்கள் பலவற்றிலும் இது தொடர்பான செய்திகள் பிரசுரமாகி இருந்தன.

இதைத் தொடர்ந்து உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் நேற்றுப் பிற்பகல் சடலத்தை அடையாளம் காட்டினர்.

சடலமாக மீட்கப்பட்டவர் அம்பாறை மாவட்டம், காரைதீவு பகுதியைச் சேர்ந்த - ஒரு பிள்ளையின் தாயாரான - 53 வயதுடைய ஆறுமுகம் வனிதா அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் ஓர் ஆசிரியராவார்.

இந்த மரணம் தற்கொலையா? கொலையா? என்ற கோணத்தில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காகக் கல்முனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (முன்னர் வந்த செய்தி 06ஆம் பக்கத்தில்)

## மட்டு. கொக்கட்டிச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை காலையில் இடம்பெற்றுள்ளதாக கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மகிழடித்தீவைச் சேர்ந்த 45 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தையான செல்லத்துரை சிவலிங்கம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டில் இருந்து நேற்றுக் காலை 7 மணிக்கு தாந்தாமலை பகுதியிலுள்ள அடைச்சல் களப்பகுதியில் மீன்பிடிப்பதற்காக சென்று கொண்டிருந்த போது வீதியின் குறுக்கே வந்த யானை அவரைத் தூக்கி வீசியத்தில் சம்பவ இடத்திலேயே அவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

அவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

## பெண்ணும் சகாவும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் அவரது நெருங்கிய சகாவான அதே வயதுடைய இளைஞன் ஒருவரும் 2 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் எனஒ பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களுக்கு எதிராகவும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய யாழ்ப்பாணம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## எரிவாயுவின் விலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைக்கப்படும்.

எரிவாயு விலை சூத்திரத்தின்படி, உலக சந்தையில் எரிவாயு விலை மற்றும் இதர செலவுகளுக்கு ஏற்ப இந்தக் குறைப்பு அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது .

## பிரி. ஆளும் கட்சி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக இலங்கைத் தமிழ் மக்களுக்கும் பிரித்தானிய ஆளும் தரப்பிற்குமான உறவுகளைப் பலப் படுத்துவதாக இப்பயணம் அமையும் என்று அவர் தெரிவித்தார்.

ஆளும் தரப்பினரின் பிரதானிகளோடும் முக்கிய சந்திப்புகள் இடம்பெற உள்ளன. இவற்றில் சுரேந்திரன் கலந்து கொள்வார்.

தமிழ் மக்களின் அரசியல், சர்வதேச நீதிப் பொறிமுறை மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிய விடயங்கள் இச்சந்திப்பில் பிரதான இடம் வகிக்கும்.

பிரித்தானிய தற்போதைய பிரதமர் லிஸ்ட் ட்ரஸ் அம்மையாருடன் பிரதமர் தெரிவிற்கு சில நாள்களுக்கு முன்னதாக நடந்த இணைய வழிச் சந்திப்பில் சுரேந்திரன் கலந்து கொண்டமையும் அதில் ட்ரஸ் அம்மையார் இலங்கையில் பொறுப்புக் கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை விடயங்களை வலியுறுத்த உறுதியளித்தமையும், அதன் பின் ஜெனீவா கூட்டத்தொடரில் பங்கு பற்றிய பின்னர் இந்த மாநாட்டிற்கு சுரேந்திரன் பயணமாகி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622






# கோட்டாவுக்கு வக்காலத்து வாங்கித் தலைமறைவாகிய சிலர் மீண்டும் தற்போது தலைதூக்க ஆரம்பித்துள்ளனர்!



## உதயகுமார் எம்.பி. சாட்டை

கோட்டாபய ராஜபக்ஷவிற்கு வக்காலத்து வாங்கி, சிறிது காலம் தலைமறைவாகிய மலையக அரசியல்வாதிகள் சிலர் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் உதயகுமார் தெரிவித்தார்.

நேற்று தலவாக்கலை கதிரேசன் ஆலய மண்டபத்தில் இடம்பெற்ற சந்திப்பில் பேசிய அவர் –

விலை அதிகரிப்பு, வரி அதிகரிப்பு என்பனவற்றால் மக்கள் பெரும் இன்னல்களை சந்திக்கின்றனர் எனச் சுட்டிக்காட்டினார்.

மேலும் மூன்று வேளை உண்டு வாழ்ந்த மக்கள், தமது உணவு வேளையை சுருக்கியுள்ளனர் என்றும் பிள்ளைகளை பாடசாலைகளில் மயங்கி விழும் நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

தொழிலாளர்களுக்கும் வாழ்க்கைச் சுமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படுவதில்லை என சுட்டிக்காட்டிய உதயகுமார், தேயிலை ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ள நிலையில் சம்பளமும் அதிகரிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

அதற்காக தமிழ் முற்போக்கு கூட்டணியாகக் குரல் கொடுப்போம் என்றும் மற்றையவர்களைபோல ஏமாற்று அரசியல் நடத்த மாட்டோம் என்றும் தெரிவித்தார்.

# பத்தனை மவுண்ட்வேர்னன் தோட்டத்தில் பாரிய மண்சரிவு!

## பெண் ஒருவர் சாவு

பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மவுண்ட்வேர்ணன் மேற்பிரிவு தோட்டத்தில் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை பெய்த கடும் மழையால் வீட்டின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 46 வயதுடைய ராமசாமி காளியம்மா மூன்று பிள்ளைகளின் தாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் வீட்டில் சமயலறையில் தனது மகளுடன் இருந்த வேளையில் திடீரென சுவர் இடிந்து பெண் மேல் விழுந்ததால் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் பெண்ணின் மகள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது மலையகத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகவே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ள அதே வேளை மண்சரிவு அபாயங்கள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் எதிர்வு கூறியுள்ளனர்.

# ‘சிறுவர் நேய மாநகரம்’ செயற்றிட்டம் மட்டக்களப்பில் அங்குரார்ப்பணம்!

மட்டக்களப்பு மாநகர சபையுடன் யுனிசெப் மற்றும் செரி நிறுவனங்கள் இணைந்து முன்னெடுக்கும் ‘சிறுவர் நேய மாநகரம்’ செயற்றிட்டத்தின் ஊடாக மாணவர்களுக்கான சைக்கிள் பாதையை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்றது.

சிறுவர்களின் உடல் உள மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு அவர்கள் மத்தியில் சைக்கிள் பாவனையை அதிகரிக்கும் வகையில் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் மாணவர்களின் அதிகரித்துச்செல்லும் உடற்பருமனை கட்டுப்படுத்தல் உட்பட பல்வேறு நோக்கைக்கொண்டு இந்தத் திட்டத்தை மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் நடைமுறைப்படுத்துதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் கல்லடி மணிக்கூண்டுக் கோபுரத்தருகில் நடைபெற்றதோடு இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் மட்டக்களப்பு கல்வி வலய பிரதிக்கல்வி பணிப்பாளர், அதிகாரிகள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.





காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி. யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஏமாற்றுதலின் பெறுபேறு

**சர்வதேசத்துக்கும் வாக்குறுதிகளை வழங்குவதும், அவற்றை நிறைவேற்றாமல் ஏமாற்றுவதும்தான் தொடர்ந்து ஆட்சி பீடத்திற்கு வந்த சிங்கள அரசுகளின் பரவணிப் பழக்கம்.**

**அந்தப் போக்கின் எதிரொலிப்பைத்தான் கடந்த 13 ஆண்டுகளாக ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் சர்வதேசம் நேரில் கண்டு வருகின்றது. அங்கு இலங்கை தொடர்பில் இரண்டொரு வருடங்களுக்கு ஒன்று என்ற அடிப்படையில், வரிசையில், நிறைவேற்றப்பட்ட – அத்தொடரில் நாளை மறுதினமும் நிறைவேற்றப்பட இருக்கின்ற – தீர்மானங்கள் உலகுக்கு இலங்கையின் இந்தப் போக்கைத்தான் பறைசாற்றி நிற்கின்றன.**

**சர்வதேச நாடுகள் மற்றும் தரப்புகளிடம் வாங்கிய கடன்களுக்கான தவணைப் பணத்தை கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து ஆறு மாதங்களாக இலங்கை மீளச் செலுத்தவில்லை. இதுவும் கடன் வாங்கும் போது வழங்கிய வாக்குறுதியை மீறிய அடாவடித்தனம்தான்.**

**இந்தப் பரவணிப் பண்பியல்பிலிருந்து இலங்கை மாறப் போவதில்லை.**

**எனினும், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் போன்ற அமைப்புகள் அவற்றின் அங்கத்துவ நாடுகளை வல்வந்தமாகக் கட்டுப்படுத்தும் தீர்மானங்களை எடுத்து, அவற்றைச் செயற்படுத்தும் நியாயாதிக்கம் கொண்டவை அல்ல. பரிந்துரைகளை – தீர்மானங்களை – எடுத்து, அவற்றைத் தார்மீக அழுத்தங்களாகப் பிரயோகித்து, அவை மூலமாகவே அங்கத்துவ நாடுகளை ஏதேனும் ஆக்கபூர்வமாகச் செயல்பட அந்த அமைப்புகள் தூண்ட முடியும். அவ்வளவுதான். அதனால்தான் ஜெனிவா அமர்வு எடுக்கும் தீர்மான விடயங்களைக் கவனத்திலேயே கொள்ளாத இலங்கை தொடர்பில், தொடர்ந்தும் காலகதி பிசகாமல், மாறி மாறித் தீர்மானங்களை நிறைவேற்றி, அவற்றின் பெயரால் தார்மீக அழுத்தங்களைக் கொழும்பின் மீது பிரயோகிக்க முயன்று வருகிறது சர்வதேச சமூகம்.**

**ஆனால், சர்வதேசப் பொது அமைப்புகள் எல்லாவற்றிற்கும் இப்படி வாக்குறுதி வழங்கி அவற்றை ஏமாற்றும் கொழும்பின் கைவரிசை தொடர்ந்தும் வெற்றிகரமாகப் பலிக்கும் என்று கொழும்பு நம்பக் கூடாது.**

**வைரமுள்ள மரங்களை எல்லாம் அநாயசமாகத் தன் அலகால் கொத்திச் சாதிக்கும் மரங்கொத்தி, வாழை மரத்தில் கொத்தி மாட்டிக்கொள்ளுமாம். அதுபோல உலக அரங்கங்கள் எல்லாவற்றிலும் வாக்குறுதி அளித்து, ஏமாற்றி வரும் – தன் தந்திரோபாயத்தைக் கனகச்சிதமாக ஆற்றி வரும் – கொழும்பு, இப்போது ஐரோப்பிய ஒன்றியத்திடம் ஜி.எஸ்.பி. வரிச் சலுகை பெறும் விடயத்தில் மீண்டும் மாட்டப் போகின்றது என்கின்றன விடயம் அறிந்த வட்டாரங்கள்.**

**காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது உட்பட பல மனித உரிமை விவகாரங்களில் மேம்பாடுகளைக் காட்டுவதாக வாக்குறுதி அளித்து, அதன் மூலம் ஏற்றுமதிக்கான வரி விலக்கு என்ற விசேட சலுகையைப் பெற்றுக் கொண்டு, அதனால் பயனடைந்தபடி, வழமை போல வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இழுத்தடிப்பது மட்டுமல்லாமல், மனித உரிமைகள் விடயத்தை மேலும் மோசமான கட்டத்தை நோக்கி இலங்கை அரசு நகர்த்திக் கொண்டிருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் அவதானிக்கின்றது.**

**இதனால் இந்தச் சலுகை – வருடாந்தம் 50 கோடி அமெரிக்க டொலர்களை (சுமார் 18 ஆயிரத்து 500 கோடி ரூபாவை) அந்நிய செலாவணியாக ஈட்டி தரும் வாய்ப்பு, 2011 இல் நேர்ந்தமை போல இப்போதும் இலங்கையிடமிருந்து பறிபோகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. அப்படி நேர்ந்தால், பெரும் பொருளாதார நெருக்கடியில் மூழ்கிக் கிடக்கும் இலங்கைக்கு, இது, 'மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதை' போன்ற நிலைமையை ஏற்படுத்தி விடும்.**

# பொருளாதார மந்தநிலைமையால் அனைத்து துறைகளும் பாதிப்பு!

## மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டு



அரசாங்கம் எவ்வளவு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டாலும் தனது கடமைகளை நிறைவேற்ற முயற்சிக்கும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மருத்துவ சங்கத்தின் 135 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற மாநாட்டில் கருத்து தெரிவிக்கும் போதே மத்திய வங்கியின் ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் பொருளாதார மந்தநிலை ஏற்படும் போது அது நாட்டின் அனைத்து துறைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் கூறினார்.

இலவச சுகாதார சேவைகள் வழங்கப்பட்டாலும், நாட்டில் அனைவரும் அதற்கு வரி செலுத்துகின்றனர் எனவும், வரையறுக்கப்பட்ட வளங்களுக்குள் சுகாதாரம் பேணப்பட வேண்டும் என குறிப்பிட்ட அவர் அடுத்த வருட தொடக்கத்தில் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவது சாத்தியமாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# தொழிலாளிகளை நான் முதலாளியாக்குவேன்!

## திகாம்பரம் சூளுரை

கட்சி மற்றும் தொழிற்சங்க பேதமின்றி அனைவரும் ஒற்றுமையாக செயற்பட்டால் தோட்டக் கம்பனிகளை நிச்சயம் அடிபணிய வைக்க முடியும் என பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

இதற்கு சிறந்த சான்று, மஸ்கெலியாவில் முன்னெடுக்கப்பட்ட ஒற்றுமை போராட்டம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் சுட்டிக்காட்டினார்.

தோட்டத் தொழிலாளர்களை, சிறுதோட்டங்களின் உரிமையாளர்களாக்கி அவர்களை முதலாளி ஆக்குவதே தனது இலக்கு எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த இலக்கு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் மலரும் புதிய ஆட்சியில் அடையப்படும் எனவும் அவர் கூறினார்.

தேர்தலுக்கு அஞ்சிநிற்கும் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் போராட்டம் வெடித்தால், தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்படும் என பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

# தேர்தல்கள் களியாட்டங்களாவதை தடுப்பதற்கு ஆணைக்குழு கரிசனை!

தேர்தல்களை களியாட்டமாகக் கருதாது கடமை, பொறுப்பு, கட்டுப்பாடு உள்ளிட்ட சமூகநலன்சார் நோக்கங்களுக்குப் பயன்படுத்தும் புதிய சிந்தனைக்கு தேர்தல் ஆணைக்குழு தயாராகி வருகிறது. இதற்கான சாத்திய வழிகள், பல துருவங்களில் ஆராயப்பட்டுள்ளன. சட்டவரைவாளர் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் என்பவற்றுடனும் இது பற்றிய களச்சாத்தியங்களை தேர்தல் ஆணைக்குழு ஆராய்ந்துள்ளது.

தேர்தல் பிரசாரச் செலவு, பிரச்சார நிதி சீர்திருத்த சட்டமூலத்தை கொண்டுவந்து, இந்நோக்குகளை வெல்ல தேர்தல்கள் ஆணைக்குழு தயாராகிறது. இதனால், இவ்வாறான ஒரு சட்டத்தின் அவசியத்தை அரசியல் பிரதிநிதிகளுக்கு உணர்த்தியுள்ளார் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் புஞ்சி ஹேவா. ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவசரமாக இதைச் சட்டமாக்குமாறு ஆலோசனையும் கூறியுள்ளார்.

எல்லையற்ற நிதி வீண்விரயங்களைத் தவிர்ப்பது, மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்புக்கூறலை கட்டாயமாக்கல், கடமை தவறியோரின் பிரதிநிதித்துவங்களை திரும்பப் பெறல், தேர்தல் விஞ்ஞாபனங்களை செயலுருவில் நிரூபித்தல், நிரூபிக்கத் தவறின் சட்டநடவடிக்கைக்கு அவரை உட்படுத்தல் மற்றும் இளைஞர்கள் இன்னும் பெண்களின் பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்தல் உள்ளிட்டவை இந்தப் புதிய பரிந்துரையில் சேர்க்கப்பட்டுள்ளன.

நல்லதொரு நோக்கிற்கு நாட்டை நகர்த்தும் வழிகள் பற்றி இவ்வளவு காலமும் கருத்துரைகள் முன்வைக்கப்பட்டாலும் அவை நடைமுறைக்கு வரவில்லை. வந்திருந்தால், இவ்வாறான சட்டங்கள் அவசியப்பட்டிருக்காது.

வெறுப்பூட்டும் பேச்சுக்கள், இனங்களுக்கு எதிரான விழிப்பூட்டும் செயற்பாடுகளைத் தடுக்க இதற்கு முன்னர் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இவற்றை எவரும் தவிர்ந்ததாக இல்லை. தேர்தல் பிரசாரங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளோ, விஞ்ஞாபனங்களோ எவரையும் வாழவைக்கவுமில்லை.


ஆனால், இதற்காக அமைக்கப்பட்ட மேடைகள், ஊர்வலங்கள், சந்திப்புக்களுக்கு எத்தனை லட்சம் ரூபாக்கள் வாரியிறைக்கப்பட்டன. இவற்றைக் கருத்திலெடுத்த தேர்தல் ஆணைக்குழு, இப்புதிய சிந்தனைக்கு களம் காண விழைகிறது. பிரதிநிதியொருவர், கடமை தவறியதாகவோ அல்லது பொறுப்பு மீறியதாகவோ கருதப்படின் எஞ்சிய அவரது பதவிக்காலம் வறிதாக்கப்படவுள்ளது. இதனால், எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள நேரிடுகிறது மக்கள் பிரதிநிதிக்கு. சமூகங்களுக்கு நப்பாசையூட்டும் அல்லது இனங்களை இடைவெளியாக்கும் அல்லது புரிந்துணர்வைப் பாதிக்கும் தேர்தல் விஞ்ஞாபனங்களும் தடைசெய்யப்பட உள்ளன.

இதனால், வேட்பாளர்கள் அல்லது அரசியல் கட்சிகள், ஏமாற்றும் பிரசாரங்களை கைவிட வேண்டி வரும். ஆனால், ஒரு சமூகத்தின் உண்மையான உரிமை முழக்கங்களைப் பாதிப்பதாக இப்புதிய சட்டம் அமையுமா? என்ற அங்கலாய்ப்புக்களும் இருக்கவே செய்கின்றன.

எனவே, இவ்விடயத்தில் சிறுபான்மை சமூகங்களின் தலைமைகள் தீர்க்க சிந்தனையுடன் செயலாற்றல் அவசியப்படுகிறனர். தேர்தல் சட்ட சீர்திருத்தங்களுக்கான நாடாளுமன்ற விசேட ஆணைக்குழுவுடன் கலந்தாலோசிக்க இந்த தலைமைகள் தயாராக வேண்டும். 'எடுப்பது பிச்சை மிதிப்பது பல்லாக்கில்' என்ற நிலைப்பாடுகளிலிருந்து விடுபட நேரிட்டுள்ள சூழ்நிலைகளே இவை. இவ்விடயத்தில், சட்டத்தின் உண்மையான நோக்கு வென்றால் போதுமானது.

நாடாளுமன்றப் பதவிகளை வெல்வதற்காக அல்லது அதிகார இலக்குகளை அடைவதற்காக அவிழ்க்கப்படும் பொய் முடிச்சுக்கள், உணர்ச்சிக் கோஷங்கள் எல்லாம் இப்புதிய சட்டத்தால் மூலையில் வைக்கப்படவுள்ளன. ஊருக்கொரு எம்.பி. அல்லது இனத்துக்கொரு பிரதிநிதியென்ற பிரசாரங்கள், பாகுபாடுக ளெல்லாம் மேடையேறலாம்.

அவ்வாறு மேடையேற்றப்படுவதால் ஏற்படும் விளைவுகளுக்காக இந்தச் சட்டத்தின் முன் பதிலளிக்க நேரிடப்போகிறது. இதனால்தான், பொறுப்புக்கூறல் என்ற விடயம் இப்பரிந்துரைக்குள் புகுத்தப்பட்டுள்ளது. எனவே, இந்தச் சட்டத்தால் எல்லோரும் பொறுப்புடன் நடந்து, பொறுப்புள்ள மக்கள் பிரதிநிதியாக மாற வேண்டி ஏற்பட்டுள்ளது. நல்லதொரு நோக்கிற்கு நாமும் ஒத்துழைப்போம். – என்றுள்ளது.



# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





**FULL OPTION**

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# மனித உரிமை பேரவை நிபந்தனைகளை ஜனாதிபதி இரகசியமாக நிறைவேற்றுவார்!

## வாசு குற்றச்சாட்டு



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நிபந்தனைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரகசியமான முறையிலாவது நிறைவேற்றுவார் என வாசுதேவ நாணயக்கார சாடியுள்ளார்.

ஜெனிவா விவகாரத்தில் அவரது வாக்குறுதிகள் மீது நம்பிக்கை கொள்ள முடியாது என்பதால் இலங்கை தொடர்பான அறிக்கை குறித்து நாடாளுமன்ற விவாதத்தை கோரவுள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு வருடமும் இலங்கைக்கு எதிராக பிரேரணைகள் கொண்டு வரப்பட்டு, அவை நிறைவேற்றப்பட்ட போதும் இதனால் எவ்வித பயனும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கிடைக்கப்பெறவில்லை என்றும் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் தீர்வு பெற்றுக் கொடுப்பதாகக் குறிப்பிட்டுக்கொண்டு தமிழ் அரசியல்வாதிகள், தமிழர்களுக்கான அபிவிருத்திகளைத் தொடர்ந்து புறக்கணித்து வருகின்றனர் என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மனித உரிமைகள் பேரவையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கமையவே செயற்படுவார் என்றும் அவரது வாக்குறுதிகள் மீது நம்பிக்கை கொள்ள முடியாது என்றும் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

# பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களை ஆராய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானம்!

கொழும்பு, ஒக். 04

நாட்டில்ஏற்பட்டுள்ளபொருளாதாரநெருக்கடிக்கான காரணங்கள் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பிக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

மாறிவரும் அரசியல் காரணங்களால் பொருளாதாரத்தில் கொள்கை மாற்றங்கள் ஏற்படுத்திய தாக்கம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும் என்றும் அறிவித்துள்ளது.

மேலும் பொருளாதாரச் சரிவை ஏற்படுத்திய கொள்கை முடிவுகளை எடுப்பதில் அதிகாரிகள் நடந்து கொண்ட விதம் பற்றியும் கவனம் செலுத்த ஆணைக்குழு எதிர்பார்க்கிறது.

பொருளாதார நெருக்கடியின் ஊடாக மக்களின் வாழ்வுரிமை மீறப்பட்டதன் காரணமாகவே இந்த விசாரணை நடத்தப்படுவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு நாட்டில் வேரூன்றி இருக்கும் ஊழல்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென மனித உரிமைகள் ஆணையாளர் அண்மையில் மனித உரிமைகள் பேரவை அமர்வில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் கடந்த கால மற்றும் அண்மைக்கால மனித உரிமை மீறல்கள் மற்றும் பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை சாய்ந்தமருது கடற்கரையில் சடலம்: மக்களின் உதவியை நாடுகின்றனர் பொலிஸார்

சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரை பிரதேசத்தில் மீட்கப்பட்ட அடையாளம் தெரியாத நபரின் சடலம் தொடர்பாக பொலிஸார் பொது மக்களின் உதவியைக் கோரியுள்ளனர். அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ்பிரி வில் நேற்று (திங்கட்கிழமை) காலை 40வயதுமதிக்கத்தக்கபெண்சடலமாகமீட்கப்பட்டிருந்தார்.

பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய அங்கு வருகை தந்த சாய்ந்தமருது பொலிஸார், கல்முனை கடற்படையினருடன் இணைந்து கடலில் மிதந்த சடலத்தை மீட்டனர். சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் கல்முனைவைத்தியசாலைக்குஎடுத்துசெல்லப்பட்டுள்ளது. எனவே காணாமல் போனவர் கள் தொடர்பாக முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தால் சாய்ந்த மருது பொலிஸ் நிலையத்தை தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## பேச்சுக்களில் ரணில் பற்றிய சர்வதேசப் பார்வை



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 140**

பிரதமர் ரணிலின் பதில் வளவளவென்று இருந்தது. வொஷிங்டன் சம்மேளனமும் அதற்கு விடுதலைப் புலிகளை அழைப்பதும் அமெரிக்கர்களின் கைகளிலேயே இருந்தமையால் அது தங்களை மீறிய காரியமாக இருந்தது என ரணில் விளக்கம் தர முயன்றார்.

ஆனாலும் நோர்வே அனுசரணையாளர்களும், அக்கறை கொண்டிருந்த சில சர்வதேச நாடுகளின் தரப்பினரும் விடுதலைப் புலிகள் ஜப்பான் சம்மேளனத்தைப் பகிஷ்கரிக்காது பங்குபற்ற வேண்டும் என்ற அடிப்படையில் பல பிரயத்தனங்களை மேற்கொண்டனர்.



ஜப்பான் தொடர்ச்சியாகவே ஸ்ரீலங்காவுக்கு இரண்டாம் மகா யுத்தத்தின் பின் பலவிதமான உதவிகள் செய்து, அதனுடைய மிகப்பெரிய நன்கொடை வழங்கும் தரப்பாக இருந்தும் – அதேபோல அமெரிக்காவுக்கு ஈரான், ஈராக் படையெடுப்புகளுக்கு உதவி செய்து இருந்தும் – சர்வதேச ரீதியாக ஜப்பானுக்கு அதற்குரிய பயன்களோ. பிரதியுபகாரங்களோ அங்கீகாரங்களோ ஐ.நா. மூலம் தன்னும் கூடக் கிடைக்கவில்லை

இம்முறை ஜப்பான் யசூசி அகாஷியைப் பிரத்தியேகப் பிரதிநிதியாக நியமித்து, நேரடியாக சர்வதேச நாடுகளை அணுகி, நிதிகளைப் புரட்டிப் பெற்றுக் கொடுத்து, தமிழர் இனப்பிரச்சனையின் தீர்வில் சர்வதேச அங்கீகாரம் பெற விரும்பியதால், விடுதலை புலிகளை எவ்வாறாயினும் அந்தச் சம்மேளனத்தில் பங்குபற்ற வைக்கத் தன்னாலான முஸ்தீபுகளைச் செய்தது. அந்த முயற்சிகளுக்கு ஜப்பானது செயற்பாடுகள் பெருத்த உதவிகள் தந்தன.

பல சர்வதேச நாடுகள் உதவிகள் தர விருப்பம் தெரிவிப்பதற்கும், ஜப்பான் சம்மேளனத்தில் பங்குபற்றுவதற்கும் விரும்பியமைக்கு ரணில் விக்கிரமசிங்க பிரதம மந்திரியாக இருந்தமையும் ஒரு காரணம். அவர்கள் ரணிலை சமாதானத்தை விரும்பியவராக – மாற்றங்களை வேண்டியவராக – மேலைத்தேய நாடுகளுடன் நட்புறவில் இருப்பவராக – பார்த்தன. ஆகவே ரணில் அரசின் இந்த பேச்சுவார்த்தைகளால் ஸ்ரீலங்காவை இனப்பிரச்சனைக்கு தீர்வு ஒன்று வரும், அதில் தாங்களும் பங்கு கொண்டோம் என்ற மகிழ்ச்சி கிட்டும் என எதிர்பார்க்கப்பட்டது. தரப்படும் நிதிகளால் பிரயோசனம் உண்டு என்ற சிந்தனைகள் எல்லாம் இருந்தன.



இன்று நாட்டு நிலைமைகளால் இப்போது தேடுவது போல, முன்னரும் பல தடவைகள் சர்வதேச நாணய நிதியத்துடனும், பிற சர்வதேச நிதி நிறுவனங்களோடும் ஸ்ரீலங்காவிற்கான கடன் நிதி உதவிகள் சம்பந்தமாக ஊடாடியவர் ரணில். இது தொடர்பில் பல இணக்கங்களில் கையெழுத்திட்ட அனுபவம் அவருக்கு உண்டு. அவரை – அவர் மேற்பார்வையிட்ட அரசுகளை – இந்த நிதியங்கள் நன்கு அறிந்திருந்தன. நம்பின.

ஆதலால் அப்போது நிதியை வழங்க முன்வருவதில் முகங்கள் சுழிக்கப்படவில்லை. கேள்விகள் எழுப்பப்படவில்லை. மாறாக, விடுதலைப் புலிகள் தமிழ்ப் பகுதிகளின் நிலைமைகள், அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய புனர் நிர்மாணங்கள், மீள் கட்டமைப்புகளுக்கு தேவையானவை என அறிவித்த தகவல்கள், தரவுகள் நிதி சேகரிப்புக்கு ஆதாரமாகவும் உதவின.

இந்தப் பின்னணிகளில்தான் விடுதலைப் புலிகள் ஜப்பான் சம்மேளனத்தில் தாம் பங்குபற்றுதில்லை என்ற முடிவை அறிவித்தார்கள். அப்படியான செய்திகளை விடுதலைப் புலிகளுக்காக மதியுரைஞர் அறிவித்தாலும், தமது தனிப்பட்ட தொடர்புகள் ரீதியில் நோர்வே அனுசரணையாளர்களுக்கு முற்றும் முழுதாகப் பேச்சுக்களில் இருந்து விலகும் தீர்மானம் தங்களுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு வந்தார்.

மேற்கொண்ட முயற்சிகளில் மிலிந்த மொறகொட தங்களுக்கு விடுதலைப் புலிகள் அமெரிக்க சம்மேளனத்தில் பங்குபற்றுவதில் ஆட்சேபம் எதுவும் இல்லை என்றும், தாங்கள் அமெரிக்க அரசுடன் விடுதலைப் புலிகளை ஒட்டி சிறப்பு விதிவிலக்கு கோருவதற்கு ஆதரவு தருவோம் என்றும் நோர்வே அரசுக்கு தெரிவித்தார். அவற்றின் வெளிப்பாடாக விடுதலைப் புலிகளுக்குப் பதிலாக அவர்களின் உறுப்புரிமை அங்கத்தவர் அல்லாத ஜோய் மகேஸ்வரனை வொஷிங்டன் கூட்டத்திற்கு அனுப்புவதற்கு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அவர் தமிழர் புனர்வாழ்வு நிதியத்தில் (வீயூநு) பொறுப்பாளர், அந்த நிதியம் முற்று முழுதும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது என்ற கரிசனை அமெரிக்கர்களுக்கு இருந்ததாலும் விடுதலைப் புலிகள் அழைக்கப்பட்டால் அது தங்களுக்காகவே இருக்க வேண்டும் என்று புலிகள் நிலைப்பாடு எடுத்ததாலும் அது சரிவரவில்லை.

சமாதான பேச்சு வார்த்தைகளில் இப்பொழுது கிளம்பியவை எல்லாம் சர்வதேச சமாதான பொறிகள்தான். ஆகவே தாங்கள் அவை பற்றி அவதானம் கொள்கிறார்கள் என்று புலிகள் விளக்கமளித்தார்கள். இவற்றால் ஜோய் மகேஸ்வரன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதிநிதியாகப் பங்குபற்றுவதும் சாத்தியமில்லாமல் போயிற்று.



பத்திரிகை தலையங்கங்கள் 'சமாதானம் இன்னும் செத்துவிடவில்லை' என்ற கருத்தோட்டத்திலேயே செய்திகள் தந்து கொண்டிருந்தன. விடுதலைப் புலிகள் வொஷிங்டன் சம்மேளனத்துக்கு அழைக்கப்பட மாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்ட செய்திகளில் மதியுரைஞர் தன்னைச் சம்பந்தப்படுத்தியதில் மிலிந்த மொறகொட விசனம் கொண்டு, இவற்றைக் காரணம் காட்டி பகிஷ்கரிப்புக்குத் தீர்மானங்களைத் தாங்களே எடுக்காமல், விடுதலைப் புலிகள் தன்னுடன் தொடர்புகளை மேற்கொண்டு இருக்கலாம் என அபிப்பிராயங்கள் வெளியிட்டார்.

தமிழ் ஊடகங்கள் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்தன.

தயா மாஸ்டர் கூறியதாக 25 ஏப்ரல் 2003 இல் 'லக்பிம' சிங்களப் பத்திரிகை 'எங்களது இத்தகைய முடிவு போருக்கு திரும்புவதற்கல்ல'எனசெய்திவெளியிட்டது.

27 ஏப்ரல் 2003 இல் தினக்குரல் 'விடுதலை புலிகளின் இடைத்தர வெளியேற்றம் நியாயமானது' என்ற தொனியிலும், ஆங்கில 'டெய்லி நியூஸ்' 25 ஏப்ரல் 2003இல் 'பேச்சுவார்த்தைகளில் முறிவுகள் இல்லை' என்ற கருத்தை தெரிவித்தும் செய்திகள் வெளியிட்டன.

அதே சமயத்தில் சில சிங்கள தீவிர ஊடகங்கள்வேறு மாதிரிசெய்திவெளியிட்டன. 'தி ஐலண்ட்' 28 ஏப்ரல் 2003 பதிப்பில் 'விடுதலைப் புலிகள் தாங்கள் நினைத்தபடி சமாதானப் பேச்சுக்களை நடத்த முடியாது என சர்வதேச தூதரகங்கள் அறிவுறுத்துகின்றன' எனப் பதிந்தது.

அதேபோல தீவிரத் தமிழ்ப் பற்றாளர்களின் ஊடகங்கள் அமெரிக்கா பேச்சுவார்த்தைகளில்தலையிட்டுவொஷிங்டன் சம்மேளனத்தில் விடுதலைப் புலிகள் பங்குபற்றாமல் தடுக்கின்றது என்ற கோணங்களில் பதிந்தார்கள்.

இவற்றாலும் மதியுரைஞரின் தனிப்பட்ட தொடர்புகளாலும் நோர்வே சமாதானப் பேச்சு அனுசரணையாளர்களுக்கு விடுதலை புலிகள் 'தந்திரோபாயமான ஒரு வெளியேற்றத்தை நடத்தி மீள் வருவதற்கு எண்ணி இருக்கிறார்களா?' அல்லது 'பேச்சுவார்த்தைகளில் இருந்து ஒரேடியாக விலகுகிறார்களா?' என்பது புரியாமல் இருந்தது.

புரியாத – புரிந்து கொள்ளாத – இந்த நெருக்கடி நிலையில் பங்குபற்றும் எல்லோருக்கும் பொறுமை அவசியமானது, அதனை வலுப்படுத்தஓ பேச்சின் அனுசரணையாளர்கள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் அடிக்கடி தொடர்பில் இருந்தார்கள். அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கொண்டு ஜனாதிபதி பதவிக்கும் கண் வைத்துக் கொண்டிருந்த மஹிந்த ராஜபக்ஷவுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். வளர்ந்து கொண்டு, முக்கியத்துவம் பெற்றுக் கொண்டிருந்த ஜே.வி.பியுடன் பேச முற்பட்டபோது அதனை ஜே.வி.பி. நிராகரித்தது. இந்த நிலைப்பாடுகளால் இரு நிலைப்பாடான போக்குகள் தோன்றின.

ரணிலின் அரசும் சர்வதேச ஈடுபாட்டாளர்களும் தாங்களே ஒழுங்கு படுத்தியபடி ஜப்பானில் நடக்கவிருந்த சம்மேளனத்தை முன்னெடுத்தனர். மற்றைய நிலைப்பாட்டில், அந்த சம்மேளனத்தில் பங்குபற்ற மறுத்து, விடுதலைப் புலிகள் தாங்கள் புலம்பெயர் மக்கள் வாழும் நாடுகளுக்குப் பறந்து, வலம் வந்து, தாங்கள் இடைக்கால நிர்வாகத்தைப் பெற்றுக் கொள்ளும்மார்க்கங்களைதேடினார்கள்.

நோர்வே அனுசரணையாளர்கள் இரண்டு பகுதிகளுடன் தொடர்பில் இருந்தாலும் விடுதலைப் புலிகள் பிடி கொடுக்காமல் இருந்தனர். அவர்கள் பக்கத்தில் அணுகக் கூடியவர் பாலசிங்கம் ஒருவராகத்தான் இருந்தார். அவரின் மேல் அழுத்தங்கள் அதிகரித்தன. அவரால் என்ன செய்ய முடிந்தது? அடுத்து அதனைப் பார்ப்போம்.

மாம்பழத்தைப் பெற்றுக்கொள்ளப் பிள்ளையார் அம்மையப்பனை வலம் வந்தமையும், முருகன் மயில் ஏறி உலகச் சுற்றியமையும் தெரிந்தவைதான்.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

# தென்னிந்திய திருச்சபையின் யாழ்.ஆதீனத்துக்கு ஐந்தாவது பேராயரைத் தெரிவதற்கான தேர்தல்!





தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண ஆதீனத்தின் தற்போதைய பேராயர் கலாநிதி டானியல் தியாகராஜா எதிர்வரும் நவம்பர் மாதம் 9 திகதி அன்று 67 வயதை அடைந்து ஓய்வு பெற இருப்பதால் ஆதீனத்துக்கான ஐந்தாவது பேராயரைத் தெரிவதற்கான தேர்தல் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதி அன்று வட்டுக்கோட்டையில் இருக்கும் ஆதீனத்தின் ஷிலோ மண்டபத்திலே இடம்பெற இருக்கிறது.

24 ஆதீனங்களைக் கொண்டு அமையப்பெற்ற தென்னிந்தியத் திருச்சபை 1947 ஆம் ஆண்டு ஆரம்பித்து இந்த ஆண்டு தனது 75 ஆவது ஆண்டு நிறைவான பவள விழாவைத் தற்போது வெகு விமரிசையாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் ஆதீனம் தனது 5 ஆவது பேராயரைத் தெரிவு செய்யவிருப்பதும் ஒரு முக்கிய விடயமாகும்.

வண. கலாநிதி வேலுப்பிள்ளை பத்மதயாளன் மற்றும் வண கலாநிதி டேவிட் சதானந்தன் சொலமன் ஆகியோர் இந்தத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

ஒக்ரோபர் 8 ஆம் திகதி தேர்தலுக்கான பிரசாரங்கள் விறுவிறுப்பாக நடைபெறுகின்றன. 200 ஆண்டு கால வரலாற்றையுடைய அமெரிக்கன் சிலோன் மிசன் பாரம்பரியத்திலே உருவாகிய தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்.ஆதீனம் புகழ்மிக்க பாடசாலைகளான உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி போன்ற கல்வி நிலையங்களையும், மக்லியோட் மற்றும் கிரீன் வைத்தியசாலைகளின் நிர்வாகத்திலே காலம் காலமாக முக்கிய பங்கு வகித்தது. ஆதீனமும் அதனுடன் நெருங்கிய தொடர்புள்ள அமெரிக்கன் சிலோன் மிசன் என்ற பதிவு செய்யப்பட்ட அமைப்பும் இலங்கையின் வடபுலத்திலே புரட்டத்தாந்து கிறீஸ்தவத்தின் வளர்ச்சிக்கும், சமூக ரீதியிலே கல்வி மற்றும் மருத்துவத் துறைக்கும், பதிப்புத் துறைக்கும் மிகவும் முக்கியமான பங்களிப்பைச் செய்திருக்கின்றன.

தென்னிந்தியத் திருச்சபையின் முதல் மூன்று பேராயர்களான சபாபதி குலேந்திரன், டேவிட் ஜெயரட்ணம் அம்பலவாணர் மற்றும் சுப்பிரமணியம் ஜெபநேசன் ஆகியோர் யாழ்ப்பாணத்தின் சிவில் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய தலைவர்களாகச் செயற்பட்டனர். இன வன்முறையும், போரும் வடக்கின் தமிழ்ச் சமூகத்தைப் பாதித்த காலங்களிலே மத எல்லைகள் கடந்து தமிழ் சமூகத்துக்கு ஆறுதலாகவும், வழிகாட்டிகளாகவும் இந்தத் தலைவர்கள் இருந்ததுடன், நீதிக்கும், இன விடுதலைக்கும் குரல் கொடுத்தனர். திருச்சபை சாதி ஒழிப்பு, பெண் விடுதலை போன்ற விடயங்களிலும் கரிசனை காட்டியது.

தென்னிந்தியத் திருச்சபையின் நான்காவது பேராயராக அதி வண. கலாநிதி டானியல் தியாகராஜா தெரிவு செய்யப்பட்ட முறை தொடர்பாக ஆதீனத்திலே பலத்த எதிர்ப்புக் குரல்கள் 2006 – 2007 காலப் பகுதியிலே தோன்றி, ஆதீனத்தின் ஒரு பிரிவினர் ஆதீனத்தை விட்டுப் பிரிந்து சிலோன் அமெரிக்கன் மிசன் திருச்சபையை உருவாக்கும் நிலை உருவானது. பேராயர் தியாகராஜாவின் காலம் மிகுந்த சர்ச்சைக்குரிய காலமாக இருந்தது. ஆதீனத்தின் சொத்துக்கள் முறைகேடாக விற்கப்படுகின்றன எனவும், ஆதீனத்திலே நேரடியாக அரசியல் மற்றும் இராணுவத்தின் தலையீடுகளுக்குப் பேராயர் தியாகராஜா அனுமதிக்கிறார் எனவும், ஊழியர்களின் நலன்கள் பேணப்படவில்லை எனவும், யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரியில் நியமனங்களிலே முறைகேடுகள் இருந்தன எனவும் பல குற்றச்சாட்டுக்கள் வெளிப்படையாக முன்வைக்கப்பட்டன. பல சந்தர்ப்பங்களிலே எதிர்ப்புப் போராட்டங்களும், ஊடக அறிக்கைகளும் கூட வெளியிடப்பட்டன.

இவ்வாறான ஒரு நெருக்கடியான சூழலிலே பேராயர் தியாகராஜாவின் பதவிக் காலம் முடிவுக்கு வருகிறது. புதிதாகத் தெரிவு செய்யப்படவிருக்கும் பேராயர் பிளவுபட்ட ஆதீனத்தை ஒன்றுபடுத்த வேண்டும் எனவும், சோபை இழந்து போன அதனது நிறுவனங்களுக்குப் புத்துயிர் வழங்க வேண்டும் எனவும், ஆதீனம் முறைகேடாக இழந்த சொத்துக்களை மீட்டெடுக்க வேண்டும் எனவும், ஆதீனத்திலே உள்ளக ஜனநாயகம் பேணப்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் பல குரல்கள் இப்போது வெளிக்கிளம்பி வருகின்றன. தென்னிந்தியத் திருச்சபையினதும், அதன் நிறுவனங்களினதும் எதிர்காலப் போக்கைத் தீர்மானிக்கப் போகும் தீர்க்கமான ஒரு தேர்தலாக இந்தத் தேர்தலைப் பலரும் நோக்குகிறார்கள்.

## மாகாண கூடைப் பந்தாட்டப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி வெற்றிபெற்றது!









உடுவில் மகளிர் கல்லூரியின் 17 வயதுப் பிரிவு அணி பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட கூடைப் பந்தாட்ட போட்டியில் 2022 ஆம் ஆண்டுக்கான சம்பியன் கிண்ணத்தை தனதாக்கியது.

இறுதிப்போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் கல்லூரியை எதிர்த்தாடிய உடுவில் மகளிர் கல்லூரி 36:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாவது இடத்தை யாழ்ப்பாணம் இந்து மகளிர் தனதாக்கியது. மூன்றாமிடம் யாழ்கன்னியர் மடத்தை வீழ்த்தி பெற்றுக்கொண்டது 17 வயது முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

## முறிகண்டியில் விபத்து; இருவர் படுகாயம்



முல்லைத்தீவு மாவட்டதில் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிகண்டி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று (திங்கட்கிழமை) காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. உணவகம் ஒன்றிலிருந்து ஏ9 வீதியை கடந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுடன், அதே திசையில் நேராக பயணித்த கார் மோதியுள்ளது.

விபத்தின்போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேலும் சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஜனாதிபதி ஆணைக்குழுக்களுக்காக 50 கோடியே 40 லட்சம் ரூபா செலவு!

### கடந்த 8 வருடங்களில் மட்டும்

கடந்த எட்டு வருடங்களில் நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்கள் நியமித்த, ஜனாதிபதி ஆணைக் குழுக்களுக்கு 50 கோடியே 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பத்தின் மூலம், இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

கோட்டாபய தலைமையிலான அரசின் ஆட்சிக்காலத்திலேயே அதிகபட்சமாக 12 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளமை இதில் தெரியவந்துள்ளது.

இதேவேளை நல்லாட்சி அரசாங்கத்தின் ஐந்து ஆண்டுகளில், ஐந்து ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு அதற்காக 25 கோடியே 40 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.



ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வெளியிடும் இந்த விசேட ஜனாதிபதி ஆணைக் குழுக்களின் முடிவுகள் தொடர்பாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

எனவே, இந்தச் செலவினங்களுக்கு பலன் கிடைத்துள்ளதா என்பதை அளவிட முடியவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

சர்வதேச அணுசக்தி முகவர் அமைப்பில்

# ஆஸிக்கு எதிரான சீனாவின் பிரேரணை இந்திய இராஜதந்திரத்தினால் முறியடிப்பு




சர்வதேச அணுசக்தி முகமையின் (IAEA) பொது மாநாடு செப்டம்பர் 26 - 30 வரை வியன்னாவில் நடைபெற்றது. அங்கு ஆஸ்திரேலியாவுக்கு அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களை (ஆனால் வழக்கமான ஆயுதங்களைக் கொண்ட) வழங்குவதை ஒட்டி AUKUS க்கு எதிராக சீனா ஒரு பிரேரணையை நிறைவேற்ற முயன்றது.

AUKUS என்பது ஆஸ்திரேலியா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டுப் பாதுகாப்பு உடன்பாடாகும்.

ஆனால் இந்தியாவின் சாமர்த்தியமான இராஜதந்திரம் சீனாவின் முயற்சியை முறியடித்தது மட்டுமல்லாமல் அது தீர்மானஸ்ல் வாபஸ் பெற்றது.

இந்த முயற்சி அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தின் கீழ் தங்கள் பொறுப்புகளை மீறுவதாக சீனா வாதிட்டது. இந்த வியத்தில் சர்வதேச அணுசக்தி முகமையின் இன் பங்கையும் அது விமர்சித்ததாக வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்வதேச அணுசக்தி முகமையின் தொழில்நுட்ப மதிப்பீட்டின் சரியான தன்மையை அங்கீகரித்து, இந்த முயற்சியில் இந்தியா ஒரு புறநிலை பார்வையை எடுத்தது. வியன்னாவில் உள்ள சர்வதேச அணுசக்தி முகமைக்கான இந்திய தூதரகம், பல சர்வதேச அணுசக்தி முகமையின் உறுப்பு நாடுகளுடன் இது தொடர்பாக நெருக்கமாகப் பணியாற்றியதாகவும் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்தியாவின் கருத்தில் கொள்ளப்பட்ட இந்தப் பங்களிப்பு பல சிறிய நாடுகளுக்கு சீன முன்மொழிவில் தெளிவான நிலைப்பாட்டை எடுக்க உதவியது.

அதன் தீர்மானத்திற்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்காது என்பதை உணர்ந்த சீனா, செப்டம்பர் 30 அன்று தனது வரைவுத் தீர்மானத்தை திரும்பப் பெற்றதாக 'எக்கனொமிக்ஸ் ரைம்ஸ்' அறிந்தது.

சுவாரஸ்யமாக, சீனர்கள் தமது இந்தப் பிரேரணை வெற்றிபெறும் என்ற நம்பிக்கையுடன் செப்டெம்பர் 28 அன்று குளோபல் டைம்ஸில் இந்த தலைப்பில் ஒரு கட்டுரையை வெளியாகும் என நம்பினர்.

ஆனால், இந்தியா அங்கத்துவ நாடுகளுடன் சாதுரியமாகக் காய் நகர்த்தி அந்த முயற்சியை முறியடித்தன.

இந்தியாவின் திறமையான மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் இராஜதந்திரம் சர்வதேச அணுசக்தி முகமையின் உறுப்பு நாடுகளால், குறிப்பாக AUKUS பங்காளிகளால் ஆழமாகப் பாராட்டப்பட்டது.

**(மூலம்: 'எக்கனொமிக்ஸ் ரைம்ஸ்')**

# சீனத் தேசிய தினத்திற்கு எதிராக உலகம் முழுவதும் போராட்டங்கள்

புதுடில்லி,செப்.04

கடந்த சனியன்று சீனத் தேசிய தினத்திற்கு எதிராக உலகம் முழுவதும் போராட்டங்கள். வெடித்தன.

சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் 20 ஆவது தேசிய மாநாட்டுக்கு அந்நாடு தயாராகி வருகிறது. அதிபர் ஜின் பிங் மூன்றாவது முறையாக அதிபராக நீடிக்க ஒப்புதல் வழங்கப்படவுள்ளது. அந்நாட்டில் நடந்த தேசிய தினத்திற்கு எதிராக உலகம் முழுவதும் பரவலாகப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

1949 ஒக்ரோபர் 01 இல் சீனப்பிரதமரான மா சேதுங் சீன தேசிய கொடியை தினமென் சதுக்கத்தில் ஏற்றினார். சீன மக்கள் குடியரசு என்ற கம்யூனிஸ்டு நாடு பிறந்துள்ளது என அறிவித்தார். ஒக்ரோபர் 02 இல் புதிய அரசானது சீனாவின் தேசிய நாளாக ஒக்ரோபர் 01 ஐக் கொண்டாடத் தீர்மானம் நிறைவேற்றியது.

புதுடில்லியி சீன தூதரகத்திற்கு வெளியே திபெத்திய இளைஞர்கள் நேற்று முன்தினம் தேசிய நாளுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள், திபெத்தியர்களிடம் இருந்து பெருமளவில் மரபணுக்களை சேகரிப்பது நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

இதுதவிர உலக நாடுகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஜப்பானின் டோக்கியோவில் மக்கள் சாலைகளில் இறங்கி, திபெத், ஜின்ஜியாங், மங்கோலியா, ஹாங்காங் மற்றும் தைவான் மக்களுக்கு ஆதரவு தெரிவித்து பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.





அனைத்து சிறுபான்மை பகுதிகளுக்கு உள்ளேயும் புகுந்த சீனாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக, போராட்டத்தில் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

ஆஸ்திரியா நாட்டின் வியன்னா சீன தூதரகத்தின் முன் சிறிய அளவில் போராட்டம் நடத்தப்பட்டது. சீனாவுக்கு எதிரான போஸ்டர்கள் மற்றும் திபெத்திய கொடிகளை ஏந்தி போராட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர். சீன அரசின் பல்வேறு சிறுபான்மை குழுக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரான்ஸின் பாரீஸ் நகரில் பல்வேறு சமூக அமைப்புகளும் போராட்டத்தில் ஈடுபட்டன.

இந்தப் போராட்டத்தில் ஹொங்கொங், பிரான்ஸில் உள்ள உய்குர் இன மக்கள், மங்கோலியர்கள், தைவானியர்கள் மற்றும் வியட்னாம் குழுக்களும் கலந்து கொண்டன. அமெரிக்காவின் நியூயோர்க், கலிபோர்னியா மற்றும் கனடா நாடுகளிலும் போராட்டங்கள் நடந்தன

# இந்தியாவில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட போர் ஹெலிகள் விமானப் படையில் இணைப்பு






புதுடெல்லி,ஒக்,04

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் இலகு ரக போர் ஹெலிக்கொப்டர்களை நாட்டுக்கு அர்ப்பணித்தார் இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இலகு ரக போர் ஹெலிக்கொப்டர் நேற்று விமானப்படையில் இணைக்கப்பட்டது.

சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிகல்ஸ் லிமிடேட் இந்த இலகு ரக போர்க் கலத்தைத் தயாரித்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் நடைபெற்ற விமானப்படை நிகழ்ச்சியில், இந்த ஹெலிக்கொப்டர் விமானப்படையில் இணைக்கப்பட்டது. இதில், பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்று நாட்டிற்கு அர்ப்பணித்தார். உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட முதல் இலகுரக போர் ஹெலிக்கொப்டர் (LCH) ஜோத்பூரில், பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் தலைமை ஏர் சீஃப் மார்ஸ் வி.ஆர் சௌதாரி ஆகியோர் முன்னிலையில் இந்திய விமானப்படையில் இணைக்கப்பட்டது. இந்த இலகு ரக போர் ஹெலிக்கொப்டரை விமானப்படையில் சேர்ப்பதன் மூலம், விமானப்படையின் பலம் அதிகரிக்கும் என முன்னதாக அவர் டுவிட்டரில் அவர் பதிவிட்டார். முதல் இலகுரக போர் ஹெலிக்கொப்டரின் முக்கிய அம்சங்கள்:

* எதிரி நாட்டு வான்வெளி தாக்குதல்களை தடுக்கும் வகையில் இந்த இலகு ரக போர் ஹெலிக்கொப்டர்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
* 5.8 டன் எடை கொண்ட இந்த இலகு ரக ஹெலிக்கொப்டர்கள் எதிரிகளின் தாக்குதல்களை தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.
* கீழே விழுந்தாலும் மிகக்குறைவான அளவில் மட்டுமே சேதம் ஏற்படும் வகையில் லேண்டிங் கியர்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
* முழுக்க முழுக்க இந்தியாவிலேயே ஹெச்.ஏ.எல் நிறுவனத்தால் இலகு ரக ஹெலிக்கொப்டர்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
* தேடுதல் பணி, மீட்புப்பணி, டேங்கர்கள் அழிப்பு, தரைப்படை தாக்குதல் என பல முக்கிய பணிகளை இந்த ஹெலிக்கொப்டர்கள் செய்ய திறன் உடையவை.
* மணிக்கு 268 கி.மீ வேகத்தில் பறக்கும் இந்த ஹெலிக்கொப்டர்கள் எதிரிகளின் ரேடாரில் இருந்து தப்பிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir

## கிழக்குப் பால் உற்பத்தித் தொழிற்துறையை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்தின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு சில பகுதிகள் மேய்ச்சல் நிலங்கள் என இது வரை வர்த்தமானி வெளியிடப்படவில்லை. வியத்மக அமைப்பின் உறுப்பினரான கிழக்கு மாகாண ஆளுநர் கிழக்கு மாகாணத்தை முழுமையாக நாசப்படுத்தியுள்ளார். இந்த மேய்ச்சல் நிலப் பிரச்சினை தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் முறையாகச் செயற்படவில்லை.

"நாட்டில் விவசாயத்துறை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் பால் உற்பத்தி தொழிற்துறையும் வீழ்ச்சியடைந்து செல்கிறது. பால் உற்பத்தியாளர்கள் மேய்ச்சல் நிலம் இல்லாத காரணத்தினால் பெரும் அசௌகரியங்களை எதிர்க்கொண்டுள்ளார்கள். மயிலடுத்துறை பகுதியில் அத்துமீறிய வகையில் ஒரு தரப்பினர் கூடாரமிட்டுள்ளார்கள். இச்செயற்பாடுகளுக்கு எதிராகவே நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தோம்,இவர்களை மீண்டும் அழைத்துவருவதில்லைஎனபொறுப்பான தரப்பினர் குறிப்பிட்டதன் பின்னரே வழக்கை மீளப் பெற்றோம். தற்போது மீண்டும் வழக்கு தாக்கல் செய்ய நேரிடும்." – என தெரிவித்தார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, "இவ்விடயம் தொடர்பில் மகாவலி அதிகார சபைக்கும், கிழக்கு மாகாண ஆளுநருக்கும் அறிவிக்கிறோம். இவ்விடயத்தில் உணர்வுபூர்வமாகவும், பிரச்சினையற்ற வகையிலும் தீர்வு காணுமாறு ஆளுநருக்கு உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கிறோம்" – என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் உத்தியோகப்பூர்வமான அறிவிப்பின் ஒரு பிரதியை எனக்கும் தாருங்கள் அதனை மாவட்ட செயலாருக்கு வழங்க முடியும்.

சேதன பசளை உற்பத்தி என ஒதுக்கப்பட்ட 5 ஹெக்டேயர் நிலப்பரப்பு அரசியல் தரப்பினரின் இணக்கமானவர்களுக்கு வழங்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இது குறித்து கவனம் செலுத்துமாறு வலியுறுத்துகிறேன் – எனத் தெரிவித்தார்.

## ஜெனிவாவில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய பிரேரணை நிறைவேற்றப்படுவதைத் தடுக்க முடியும் என தேவையற்ற நம்பிக்கையைத் தாம் கொண்டிருக்கவில்லை என வெளிவிவகார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என 'டெய்லி மிரர்' தெரிவித்துள்ளது.

இலங்கை குறித்த இந்தப் பிரேரணை இலங்கையின் பொறுப்புக்கூறல், மனித உரிமை மீறல் தொடர்பில் ஆதாரங்களைச் சேகரிக்கும் பொறிமுறையை வலுப்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கின்றது.

கடந்த வருடத் தீர்மானத்தின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் இந்தப் பொறிமுறையை உருவாக்கியுள்ளது.

இந்தப் பொறிமுறை இயங்குவதற்கு மேலும் வளங்களை வழங்குமாறு புதிய பிரேரணை வேண்டுகோள் விடுக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் தனக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்படுவதைத் தடுப்பதற்கான ஆதரவை 47 நாடுகளிடமிருந்து பெற முடியாது என இலங்கை கருதுவதாக வெளிவிவகார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கைக்கு ஆதரவாக கடந்த காலங்களில் வாக்களித்துவந்துள்ள பங்களாதேஷ், ரஷ்யா போன்ற நாடுகள் இம்முறை மனித உரிமை கவுன்ஸிலில் வாக்களிக்கும் உறுப்புரிமை பெறவில்லை .

இந்தியா இம்முறையும் வாக்கெடுப்பை தவிர்க்கலாம் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகின்றது. பிராந்திய வல்லரசின் அழுத்தங்கள் காரணமாக நேபாளமும் வாக்கெடுப்பைத் தவிர்க்கக் கூடும்.

வழமையாக இலங்கைக்கு ஆதரவளிக்கும் மத்திய கிழக்கு நாடுகளும் இம்முறை வாக்களிப்பை தவிர்க்கலாம் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகின்றது.

பிரேரணையைக் கொண்டுவருபவர்களிற்கு போதிய ஆதரவு கிடைக்கும். இந்த யதார்த்தத்தை நாங்கள் உணர்ந்துள்ளோம் என வெளிவிவகார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் –

சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பிரேரணைக்கு இணை அனுசரணையாளர்களாக மேலும் பல நாடுகள் கைச்சாத்திட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்' என்ற தலைப்பிலான வரைவுப் பிரேரணைக்கு ஆரம்பத்தில் பிரித்தானியா, அமெரிக்கா, ஜேர்மனி, கனடா, மலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வடக்கு மாசிடோனியா ஆகிய நாடுகளே அனுசரணை வழங்கியிருந்தன.

இந்த நிலையில் அல்பேனியா, ஆஸ்திரேலியா, ஒஸ்ரியா, பெல்ஜியம், கனடா, செக் குடியரசு, டென்மார்க், எஸ்டோனியா, பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஐஸ்லாந்து, அயர்லாந்து, லத்வியா, லிச்சென்ஸ்டீன், லித்துவேனியா, லக்சம்பர்க், மார்ல் தீவுகள், நெதர்லாந்து, நியூசிலாந்து ஆகிய நாடுகள் பிரேரணைக்கு அனுசரணை வழங்கிக் கையெழுத்திட்டுள்ளன.

நோர்வே, ஸ்லோவாக்கியா, சுவீடன், துருக்கி, பிரித்தானியா, வடக்கு அயர்லாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளும் இந்தப் பிரேரணைக்கு அனுசரணை வழங்கியுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வு எதிர்வரும் 7 ஆம் திகதி நிறைவடையவுள்ள நிலையில், இலங்கை தொடர்பான பிரேரணை மீது நாளை மறுதினம் வியாழக்கிழமை வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

ஜெனிவா கூட்டத் தொடரின் இறுதி அமர்வில் பங்கேற்பதற்காக சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி ஜெனிவா பயணமாகியுள்ளார்.

அலி சப்ரியுடன் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளும் ஜெனிவா சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.






காலைக்கதிர் Kalaikkathir

# சட்டவிரோத மீன்பிடிக்குத் துணைபோகும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிகாரிகள்!

## உடன் மாற்றுமாறு கோரி மக்கள் போராட்டம்





முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு துணைபோகும் அதிகாரிகளை மாற்றுமாறு கோரி முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகம் நேற்று (திங்கட்கிழமை) மீனவர்களால் முற்றுகையிடப்பட்டு மீனவர்களது கோரிக்கைகள் தீர்க்கப்படும் வரை தொடர் போராட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர் சம்மேளனத்தால் இந்தத் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மீனவர்கள் தொடர்ச்சியாக பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எரிபொருள் கிடைக்காத நிலையில் பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் தொழிலுக்குச் சென்று வருகின்ற போதிலும் கடலில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் காரணமாக மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மீனவர்கள் கடலில் வளங்கள் சட்டவிரோத தொழில் செய்பவர்களால் அழிக்கப்படுவரும் நிலையில் கஞ்சி குடிக்கும் நிலைக்கு வந்துள்ளார்கள்.

அந்த நிலைமையிலிருந்தாவது காப்பாற்றுங்கள் என அடையாளப்படுத்தி போராட்டத்தில் கஞ்சி காச்சி அனைத்து மீனவர்களுக்கும் பரிமாறப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் தமது நிலைமையை புரிந்து கொள்ளாத அதிகாரிகள் சட்டவிரோத தொழிலுக்கு உடந்தையாகவுள்ள அதிகாரிகள் எமக்கு தேவையில்லை எனவும் அவர்களை உடனடியாக முல்லைத்தீவிலிருந்து மாற்றம் செய்து தமக்கான ஒரு தீர்வை வழங்குமாறு வலியுறுத்தியும் சட்டவிரோத தொழில்களை நிறுத்துமாறு கோரியும் போராடி வருகின்றனர்.

முல்லைத்தீவு கடற்கரை வீதியில் உள்ள கடற்தொழில் நீரியல்வள திணைக்கள அலுவலகம் முன்பாக பந்தல் அமைத்து தமக்குரிய தீர்வு கிடைக்கும் வரை தொடர் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

# பொறுப்புக் கூறலுக்கான பொறிமுறை மிக அவசியம்

## சம்பந்தன் வலியுறுத்து



கொழும்பு,ஒக்.04

இலங்கையில் இழைக்கப்பட்டவை எனக் கூறப்படுகின்ற மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புக் கூறலைச் செய்வதற்கான சர்வதேச சமூகத்தின் பிரசன்னத்துடான பொறிமுறையொன்றை புதிய பிரேரணையில் உள்ளீர்க்கப்பட வேண்டுமென்று பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளிடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கோரியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை ஊக்குவிக்கும் பிரேரணையொன்று கொண்டுவரப்படுகின்றது.

இந்தப் பிரேரணையை கொண்டுவரும் முயற்சிகளை எடுத்துள்ள, பிரித்தானியா, அமெரிக்கா, ஜேர்மன், கனடா போன்ற நாடுகள் அதனை முழுமையான நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்துடன், நிறைவேற்றப்படும் பிரேரணையை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான உரிய பொறிமுறைகளும் வகுக்கப்பட வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் கடந்த 13ஆண்டுகளாக பொறுப்புக்கூறலுக்கான செயற்பாடுகள் எவற்றையும் முன்னெடுக்கவில்லை. எடுக்கப்பட்ட ஒருசில முயற்சிகளும் திருப்திகரமானவையாக இல்லை. இவ்வாறான நிலையில்தான் புதிய பிரேரணையொன்று தற்போது கொண்டு வரப்படவுள்ளது.

ஆகவே, அந்தப் பிரேரணையில், இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் அதேவேளை, அதனை நடைமுறைச்சாத்தியமாக்கும் வகையிலான சர்வதேச சமூகத்தின் பிரசன்னத்துக்கான ஏற்பாடுகளை உள்ளீர்க்க வேண்டியது அவசியமாகின்றது.

இந்தவிடயத்தில் இணை அனுசரணை வழங்கும் பிரித்தானியா தலைமையிலான நாடுகள், அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், உள்ளிட்டவை விசேட கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

# போகாவத்தை பாடசாலை அதிபரை மீளநியமிக்க வலியுறுத்தி போராட்டம்!

போலிக் குற்றச்சாட்டுகளின் பிரகாரம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள அதிபரை, மீண்டும் தமது பாடசாலைக்கு நியமிக்குமாறு வலியுறுத்தி கொட்கலை, பத்தனை – போகாவத்த சிங்கள வித்தியாலய மாணவர்களும், அவர்களின் பெற்றோரும் நேற்று (திங்கட்கிழமை) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு பாடசாலையில் பணம் வசூலிக்கப்பட்டதாகவும், அதனை வழங்க மறுத்த மாணவியொருவரை தாக்கினார் எனவும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு போலியானது என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டினர்.

எனவே, இது தொடர்பில் விரைவில் விசாரணைகளை முன்னெடுத்து, தமது பாடசாலை முன்னேற்றத்துக்காக பாடுபட்ட அதிபரை மீண்டும் தமது பாடசாலைக்கு அனுப்புமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கையும் விடுத்தனர்.

பாடசாலைக்கு முன்பாக தலவாக்கலை – நாவலப்பிட்டிய பிரதான வீதியில் போகாவத்தை நகரத்தில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எதிர்ப்பு பதாதைகளை ஏந்தியவண்ணம், கோஷங்களை எழுப்பியவாறு போராட்டகாரர்கள் போராட்டத்தை சுமார் இரண்டு மணித்தியாலயங்கள் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# கோப் குழுவிலிருந்து சரித ஹேரத் நீக்கம்!

## ஜனாதிபதி, பிரதமர் மீதும் அவர் குற்றச்சாட்டு

ஜனாதிபதியும் பிரதமரும் தன்னை கோப் குழுவிலிருந்து நீக்கியதன் மூலம் ஊழலிற்கு வழி வகுக்கின்றனர் என கோப்பின் முன்னாள் தலைவர் சரித ஹேரத் குற்றம்சாட்டியுள்ளார்.

டுவிட்டரில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரண்டு மாத கால தாமதத்தின் பின்னர் கோப் குழுவின் புதிய உறுப்பினர்கள் தொடர்பான அறிவிப்பு வெளியாகியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். எதிர்வுகூறப்பட்டமை போன்று எனது பெயர் இடம்பெறவில்லை, ஊழல்நிலவும் முறைமைக்கு ஆதரவான திருடர்கள் இரகசிய ஒப்பந்தம் செய்பவர்கள் வெற்றி பெற்றிருக்கின்றார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார குற்றங்களுக்குக் காரணமானவர்கள் என்னை கோப் குழுவிலிருந்து வெளியேற்ற விரும்பினார்கள் எனக் குறிப்பிட்டுள்ள அவர் ஜனாதிபதியவர்களே, பிரமரே இது உங்களுக்கு வெட்கக்கேடு எனக் குறிப்பிட்டுள்ளார்.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.10.2022இல் வெளியிடப்பெற்றது.